## அன்புள்ள வாக்காளப் பெருமக்களே

நமது மண்ணில் எதிர்வரும் செம்டம்பர் 8ம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் நமது கௌரவமும் நமது சந்ததியினரின் எதிர்காலமும் எடைபோடப்படவுள்ளன. 2012ல் நமது சமூகத்தின் அரசியல் நடப்பு எவ்வாறு வலுவாக அமையவுள்ளது என எதிர்வுகூறிய ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு உயிர் கொடுக்கும் தேர்தல் நம்முன் வந்துவிட்டது.

தனித்துவம் காக்கவும், தன்மானம் ஓங்கச் செய்யவும், தனிமனித அபிலாஷைகளுக்கு விலங்கிடவும், அநியாயத்தை தட்டிக்கேட்கவும் இத்தேர்தலில் நாம் நமது பலத்தை நிரூபிக்க வேண்டியுள்ளது.

ஆளும் கூட்டத்தாரால் அலட்சியப்படுத்தப்பட்டு, மாற்றுக் கட்சிகளால் கேலி செய்யப்பட்டு, கடும்போக்கு பெரும் தேசியவாதிகளால் வாட்டப்பட்டு, மண் இழந்து, மானம் இழந்து இருப்பையும் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கி,பொருளைப் பறி கொடுத்து மருளைத் துணைக்கழைத்து மார்க்கமின்றி மமதையாளரிடம் மண்டியிட்டுக் கிடக்க வேண்டிய சமூகமல்ல நாம்!

நமது ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் மரணிப்பதற்கு முன்னாள் 1999ல் சரிநிகர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி இங்கு மீள்பிரசுரம் செய்யப்பட்டு உங்கள் கரங்களில் இப்போது தவழ்கின்றது.

இனப்பிரச்சினை தீர்வில் எமது இறுதி இலக்கு எவ்வாறாக இருக்க வேண்டும், அதனை நோக்கிய நமது பயணம் எப்படி இருக்க வேண்டும், அந்தப் பயணத்துக்கான பாதை எவ்வாறு செப்பனிடப்பட வேண்டும் என்பவற்றை எல்லாம் இங்கே சூசகமாக நமக்கு சொல்லித் தருகின்றார்.

அஷ்ரப்பின் பாசறைகளில் வளர்ந்தவர்கள் என மார்தட்டிக் கொண்டு, அவரது பிம்பங்களை மட்டும் மக்கள் மத்தியில் கவர்ச்சி காட்டி முஸ்லிம்களின் உணர்வுகளில் கலப்படம் செய்யும் போலித் தலைவர்களின் வழிமாறிய கோட்பாடுகளை இங்கு அவர் தோலுரிக்கின்றார்.

முஸ்லிம் தேசியம், முஸ்லிம் தனித்துவம், முஸ்லிம் சமூகத்தின் தனியான அரசியல் அடையாளம், முஸ்லிம்களுக்கான நிலத் தொடர்புடனான அதிகாரப் பகிர்வு அதனை வேண்டி நிற்பதற்கான நியாயங்கள் என்பவற்றை இங்கே அவர் விபரிக்கின்றார்.

தேசியகீதம், தேசியக்கொடி, தேசியமொழி என்பவற்றின் பரிமாணங்களை ஒருசிறுபான்மை சமூகத்தின் கண்களால் பார்க்கின்றார்.

பேரினவாதிகளின் கைக்கூலிகளாக இருந்துகொண்டு அவர்காளால் கிடைக்கும் அதிகாரம், பணபலம்,பாதுகாப்புக் கெடுபிடி என்பவற்றின் துணையோடு பலாத்காரமாக நமது வாக்குகளைப் பறித்தெடுக்கும் பாதகச் செயல்களில் ஈடுபடுவோர் இன்று அஷ்ரபின் கோட்பாடுகளை திரித்துக்கூறி முஸ்லிம வாக்காளர்களை குழப்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், 2012ல் நாம் நமது இலக்குகளை நோக்கி நமது பாதையை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. அதற்காகவே நாம் நமது மண்ணில் நமது மரத்தில் களம் இறக்கியுள்ளோம். நம்மீது விரிக்கப்பட்ட சதிவலைகளை தூக்கி வீசிவிட்டு நமது கைகளில் போடப்பட்டிருந்த விலங்குகளை ஒடித்து வீறுநடை போட்டு வெற்றிக் கொடி நாட்ட வந்துள்ளோம்.

சமூகத்தின் உரிமைகளை பேரினவாதிகளிடம் அடமானம் வைத்துவிட்டு சுயநல நோக்குடன் அதற்குப் பகரமாக தமக்கென சலுகைகளை பெற்றுக்கொண்டு நமது எதிர்கால இருப்பை சூனியமாக்கிக்கொண்டிருக்கும் போலி தலைவர்களிடமிருந்து நாம் எச்சரிக்கையாக இருக்க உறுதி பூணுவோமாக.

ஆயிரம் விளக்குடன் வரும் ஆதவனாக அல்லாஹ் ரசூல் வழி நடந்தே நாம் நல்லதோர் உலகம் செய்திடுவோம்

மரத்தை வளர்ப்போம், மற்றவை மறப்போம்

எம்.ரி. ஹஸன் அலி பா.உ
செயலாளர் நாயகம் - ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

